In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 411/2022 |
| PW: | 8 |
| காவல் நிலையம்: | கடம்பூர் |
| தேதி: | 27-01-2026 நாள்: செவ்வாய் |
| பெயர்: | ரமேஷ்குமார் |
| த/பெ: | சண்முகம் |
| கிராமம்: | பள்ளிபட்டு |
| தாலூகா: | பள்ளிபட்டு |
| வேலை: | உதவி ஆய்வாளர் |
| வயது: | 39 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2026**

(Accused absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed).

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் திருவள்ளுவர் மாவட்டம், பள்ளிபட்டு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் தூத்துக்குடி மாவட்டம் கடம்பூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 01.04.2022 ம் தேதி நிலையத்தில் இருந்த போது, கடம்பூர் காவல்நிலைய காவலர் திரு. பிரான்சிஸ் சேவியர் என்பவர் கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற காயத்தகவலை பெற வேண்டி, மேற்படி மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ஓட்டப்பிடாரம் தாலுகா மலைப்பட்டி கிராமம் தெற்கு தெருவை சேர்ந்த காளிமுத்து மனைவி இசக்கியம்மாள் வயது 65 என்பவரின் காயத்தகவலை பெற்று மேற்படி இசக்கியம்மாளிடம் 16.30 முதல் 17.30 மணிவரை புகார் வாக்குமூலம் பெற்று அப்பால் நிலையம் 18.30 மணிக்கு 01.04.2022 ம் தேதி வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப கடம்பூர் காவல்நிலைய குற்ற எண் 49/2022 U/s.

294(b),324,323,506(i) IPc and 4 of TNPHW ACt ஆக வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

2) இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 02.04.2022 ம் தேதி காலை 07.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான மலைப்பட்டி கிராமம் மேலக்காலணி தெற்கு தெருவில் உள்ள இசக்கியம்மாள் வீட்டிற்கு சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் வேலுச்சாமி மற்றும் ரம்யா ஆகியோர் முன்பு பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3) அப்பால் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அப்பால் இவ்வழக்கில் நேரில் பார்த்த சாட்சிகளையும் கேள்விபட்ட சாட்சிகளையும், தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) அப்பால் கோவில்பட்டி அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த இசக்கியம்மாளை விசாரணை செய்தும் உடன் இருந்த புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்த ராதா, க/பெ.ராஜா என்பவரை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5) இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் சுரேஷ், த/பெ.பரமசிவன் என்ற சுதந்திரம் என்பவர் தானகவே 13.04.2022 ம் தேதி நிலையம் ஆஜரானவரை தக்க இரு நபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டார்.

6) இவ்வழக்கில் காயம்பட்ட இசக்கியம்மாள் என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திருமதி. உமா என்பவரை 07.04.2022 ம் தேதி அவர் கொடுத்த காயச்சான்று பிரகாரம் சாதாரண காயம் என்று சான்று வழங்கிய மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7) இவ்வழக்கின் விசாரணை முடித்து இவ்வழக்கின் எதிரி சுரேஷ் குமார் த/பெ. பரமசிவம் என்ற சுதந்திரம் என்பவர் மீது குற்ற இறுதியறிக்கை 13.04.2022 ம் தேதி U/s. 294(b),324,323,506(i) IPc and 4 of TNPHW ACt ன் படி வழக்கு தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) நான் இவ்வழக்கு விசாரணையை 02.04.2022 ம் தேதி விசாரணைக்கு எடுத்துகொண்டேன். மேற்படி காவல்நிலையத்தில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை பணியில் இருந்தேன் என்றால் அதுபற்றி நினைவு இல்லை. குற்ற சம்பவம் பற்றி காவல்துறைக்கு தெரிவித்ததன் பேரில் அதன் அடிப்படையில் பதிவு செய்யப்படுவது தான் முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான்.

2) அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது அ.சா.1 மற்றும் அ.சா.2 யும் சம்பவம் நடந்த மறுநாள் சம்பவம் தொடர்பாக புகார் அளித்ததாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் விசாரணை செய்த அ.சா.2 தனது சாட்சியத்தில் சம்பவம் நடந்த 30.03.2022 ம் தேதி 11.45 மணியளவில் காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை செய்து ஆவணங்கள் பதிவு செய்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

3) நான் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது அ.சா.1 கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு எங்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்ற விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அவரது புகார் வாக்குமூலத்தை படித்து தெரிந்துகொண்டேன். எனது விசாரணையில் அதுகுறித்து துலங்கியதா என்றால் துலங்கியது. அவரது புகார் வாக்குமூலத்தில் ஓட்டப்பிடாரம் தாலுகா ஒட்டநத்தம் மருத்துவமனை சென்று முதல் சிகிச்சை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

4) மேற்படி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துகொண்டதற்கான ஆவணங்களை கைப்பற்றி அங்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. 30.03.2022 ம் தேதி இரவு 11.30 மணியளவில் அ.சா.1 கிராமத்திலிருந்து

ஒட்டநத்தம் கிராமத்திற்கு எவ்வாறு சென்றார்கள் என்று எனது விசாரணையில் துலங்கியதா என்றால் மலைப்பட்டி கிராமத்திலிருந்து ஆட்டோ மூலம் சென்றதாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி ஆட்டோ குறித்த விபரத்தை விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

5) அ.சா.1 ன் மகளான அ.சா.2, அ.சா.2 ன் கணவரான அ.சா.3 சம்பவ சமயத்தில் என்ன தொழில் செய்தார் என்று எனது விசாரணையில் துலங்கியதா என்றால் கூலி வேலை செய்வதாக விசாரணையில் கூறியுள்ளார். நான் அ.சா.3 யைப் பற்றி சரியாக விசாரணை செய்யாததனால் அவர் பரவல்லிக்கோட்டை டாஸ்மார்க் ஊழியராக வேலை செய்தது குறித்து குறிப்பிடாமல் உள்ளேன் என்றால் அதுபற்றி தகவல் இல்லை.

6) அ.சா.1 வீட்டிற்கு கீழ் புறம் எதிரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கும் அ.சா.1ன் வீட்டிற்கும் இடையே உள்ள சந்தில் தான் அ.சா.3 டாஸ்மார்கில் இருந்து எடுத்து வந்த சரக்குகளை இரவில் விற்பனை செய்வார் என்றால் அதுபற்றி தகவல் இல்லை. அது சம்பந்தமாக எதிரி கடம்பூர் காவல்நிலையத்தில் அ.சா3 ன் மீது பலமுறை புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி நினைவு இல்லை.

7) நான் சம்பவ இடத்தை பார்வையிடும் போது அ.சா.1 ன் வீட்டின் முன்பு சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு எதிர்புறம் மஞ்சநத்தி மரம் உள்ள ஒரு காலிமனை உள்ளது என்றால் சரிதான்.

8) மேற்படி காலிமனைக்கு மேல்புறம் ஒரு தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தெருவிற்கு மேல்புறம் அ.சா.3 ன் வீடு உள்ளது என்றால் சரிதான். அ.சா.2 ராதா என்பவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது மேற்படி சம்பவம் அ.சா.3ன் வீட்டு வாசலின் முன்பு நடைபெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

9) மேற்படி சம்பவம் அ.சா1 கொடுத்த புகாரில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் அ.சா.1 ன் வீட்டின் முன்பு பேசிக் கொண்டிருந்த போது சம்பவம் நடைபெற்றதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.2 மற்றும் அ.சா.3

ஆகியோர் வீட்டின் முன்பு பிரச்சனை நடந்தபோது அ.சா.1 தனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்ததாகவும், சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

10) எனது விசாரணையை ஆரம்ப நிலையில் இருந்தே ஒரு தலைபட்சமாக செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.3 ன் வேண்டு கோளின் படி எதிரியின் மீது ஒரு பொய் வழக்கை போடுவதற்கு அ.சா.1 யை பயன்படுத்தப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. கடம்பூர் காவல்நிலைய 30.03.2022 ம் தேதி சம்பவ இடத்தில் தயாரித்த வாக்குமூலத்தையும் அ.சா.1 மற்றும் அ.சா.2 31.03.2022 ம் தேதி கடம்பூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை மறைத்தும், 01.04.2022 ம் தேதி ஒரு புகார்மனுவினை இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல .மேற்படி இரண்டு புகார்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

11) அ.சா1 ற்கு காயம்பட்ட விபரம் பற்றி தெரிய வேண்டும் என்றால் ஒட்டநத்தம் மருத்துவமனையின் மருத்துவரை விசாரணை செய்து ஆவணங்களை தாக்கல் செய்திருந்தால் அ.சா.1ன் காயங்கள் தெரிய வந்திருக்கும் என்றால் அதுபற்றி தகவல் இல்லை. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பக்கமும் மேலும் கீழும் தெற்கும் வடக்கும் வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல. தெற்கு பக்கம் காலி மனையும் அதில் ஒரு வேப்பமரமும் ஒரு மஞ்சநத்தி மரமும் உள்ளது.

12) சுற்றியுள்ளவர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசரில் சாட்சிகளாக போடப்பட்டுள்ள நபர்கள் கீழ்புற தெருவில் உள்ளார்கள் என்றாலும் அவர்கள் அ.சா.1ற்கு வேண்டிய நபர்கள் என்பதால் அவர்களை சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) சம்பவத்தன்று இரவு அ.சா.1 ன் குடும்பத்தாரை தவிர வேறு நபர்கள் கிடையாது என்றால் சரியல்ல. எதிரியின் வீட்டில் உள்ள அவரது மனைவி மற்றும் மகள், மகன்

ஆகியோர்களை விசாரணை செய்தேனா என்றால் விசாரணை செய்யப்பட்டது தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன். இவ்வழக்கில் அதனை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

14) நான் சொன்னது போல் அ.சா.1ற்கு எதிரியால் எந்தவித காயங்களோ ஏற்படவில்லை என்றாலும் எதிரியால் மேற்படி வாசகங்கள் பயன்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி எதிரியானவர் அ.சா.1 யைப் பார்த்து பெண்மையை களங்கப்படுத்தும் வகையிலோ எச்சரித்தும் செயல்படவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 தனது விசாரணையிலோ அல்லது புகாரிலோ தான் களங்கப்படுத்தப்பட்டதாக கூறவில்லை என்றால் சரியல்ல.

15) நான் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், சாட்சியங்களை விசாரித்தாக சொல்வதும் எந்த விசாரணையும் செய்யாமலும், அலுவலகத்தில் இந்த வழக்கிற்கு ஏற்றாற்போல் சோடனை செய்யப்பட்டது என்றாலும் எனது விசாரணை இந்த வழக்கிற்கு ஒரு தலைபட்சமானது என்றாலும் சரியல்ல. எதிரி கடம்பூர் காவல்நிலையத்தில் ஆஜராகி ஜாமீன் பெற்றுக்கொண்டார் என்று கூறுவது உண்மையல்ல என்றால் அவர் மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம் மூலம் பிணை பெற்று சென்றுள்ளார் என்றால் சரியல்ல.

16) இந்த சான்றே எனது விசாரணை நேர்மையற்றது என்று துலங்கிறது என்றாலும் இது பொய் வழக்கு என்றாலும் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.